**சுருக்கம்**

சட்டக் கல்வித் துறை – வேலூர் அரசு சட்டக்கல்லூரியில் 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டு சட்டப்படிப்பில் புதிதாக ஒரு வகுப்பு துவக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சட்ட (சக)த் துறை**

அரசாணை (நிலை) எண். 465

நாள்: 18.07.2017
ஹேவிளம்பி ஆண்டு – ஆடி – 2
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டது:

சட்டக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண் 961/அ3/2016, நாள் 26.04.2016 மற்றும் 28.11.2016.

– – – –

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் சட்டக் கல்வி இயக்குநர், மற்றவற்றுக்கிடையே, வேலூர் அரசு சட்டக்கல்லூரியானது 3 ஆண்டு சட்டப் படிப்பில் 80 இடங்களுடன் தொடங்கப்பட்டு 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருவதாகவும், இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பு பயில ஏராளமானோர் விண்ணப்பம் செய்து வருவதாகவும், ஆனால், வேலூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சட்டம் பயில விரும்புபவர்களுக்கு 3 ஆண்டு சட்டப் படிப்பில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 80 இடங்கள் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும், வேலூர் அரசு சட்டக் கல்லூரி தற்போது சொந்தக் கட்டடத்தில் செயல்படுவதால் கூடுதல் வகுப்பறைகள் போதுமான எண்ணிக்கையில் உள்ளது எனத் தெரிவித்து, சட்டம் பயில விரும்பும் மாணவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்திடும் வகையில், 5 ஆண்டு சட்டப் படிப்பில் 80 மாணவர்களுடன் புதிதாக ஒரு வகுப்பைத் துவக்கி ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. சட்டக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் 80 மாணவர்களுடன் புதிதாக ஒரு வகுப்பைத் துவக்கிட ஆணையிடுகிறது.

3. வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக துவக்கிடப்படும் 5 ஆண்டு சட்டப் படிப்பிற்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவு மற்றும் இந்திய வழக்குரைஞர் மாமன்றத்தின் ஒப்புதலினைப் பெற உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்(பொ)

பெறுநர்

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. முதல்வர்(பொ), அரசு சட்டக் கல்லூரி, வேலூர்.
3. பதிவாளர் (பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை – 600 028.

நகல்

1. அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. மாநில கணக்காயர், சென்னை – 600 018/600 035.
3. இருப்பிடத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோ. / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.